**செய்தி வெளியீடு எண். 753** **நாள்.24.10.2009**

## பத்திரிக்கைச் செய்தி

சென்னை நகரத்தில் அம்பத்தூர், இராயபுரம், தாம்பரம், மயிலாப்பூர் மற்றும் ஆயிரம்விளக்கு ஆகிய ஐந்து மண்டலங்களில் நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைகளை 100% தணிக்கை செய்து போலி குடும்ப அட்டைகளைக் கண்டறிந்து களைவதற்காக தணிக்கை செய்யும் பணி 20.10.2009 முதல் துவக்கப்பட்டு தற்போது நடைபெற்று வருகிறது. தணிக்கை அலுவலர்கள் வாராந்திர நாட்கள் மட்டுமல்லாமல் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் குடும்ப அட்டைகளை தணிக்கை செய்ய வருவார்கள் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இப்பணிகள் மேற்கண்ட பகுதிகளில் 15.11.2009 வரை நடைபெறும்.

எனவே, நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைகள் வைத்திருக்கும் உண்மையில் வசிக்கும் அனைத்து குடும்பங்களும் கணக்கெடுப்பு செய்யப்படும். குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, எரிவாயு இணைப்பு அட்டை, மின் இணைப்பு அட்டை ஆகியவற்றை தணிக்கை அலுவலர்கள் சரிபார்ப்பதற்கு வசதியாக தயார் நிலையில் வைத்திருக்க கோரப்படுகிறார்கள். தணிக்கை அலுவலர்கள் குடும்ப அட்டைகளை வீடு வீடாக வந்து தணிக்கை செய்வார்கள். தணிக்கை அலுவலர் எவரேனும் வீடு வீடாகச் சென்று தணிக்கை செய்யாமல், ஒரே இடத்தில் அமர்ந்துகொண்டு தணிக்கை செய்தால், அது குறித்து சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைதாரர் துணை ஆணையர்(நகரம்)வடக்கு/தெற்கு மற்றும் சம்பந்தப்பட்ட மண்டல உதவி ஆணையர்கள் ஆகியோருக்கு தகவல் தெரிவிக்கலாம். மேலும், மேற்கண்ட மண்டலங்களிலுள்ள தெருக்கள் அல்லது பகுதிகளுக்கு 10.11.2009-க்குள் தணிக்கை அலுவலர்கள் வரவில்லை என்றால் சம்பந்தப்பட்ட கீழ்கண்ட அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். இந்த அலுவலர்களின் தொலைபேசி எண்**கள்** விவரம் வருமாறு:

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்:**

**சென்னை நகரம்:**

துணை ஆணையர் (நகரம்) வடக்கு - 28551028
உதவி ஆணையாளர், அம்பத்தூர் மண்டலம் - 26570570
உதவி ஆணையாளர், இராயபுரம் மண்டலம் - 25953285

துணை ஆணையர் (நகரம்) தெற்கு - 28551026
உதவி ஆணையாளர், தாம்பரம் மண்டலம் - 22262737
உதவி ஆணையாளர்,மயிலாப்பூர் மண்டலம் - 24642613
உதவி ஆணையாளர், ஆயிரம்விளக்கு மண்டலம் - 26421205

ஆணையர் அலுவலகம் 28592255

**ஆணையாளர்**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9